**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 20 /2022 PW1**

11.02.2026 **வா..சா.1 மோகனபிரியா சத்திய வாக்குமூலத்தின் பேரில் 6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் பி.இ. படித்துள்ளேன். எனது பெற்றோருக்கு திருமணமாகி இன்றில் இருந்து சுமார் 40 ஆண்டுகள் இருக்கும். முருகன், ஆறுமுகம், குட்டி (எ) ரமேஷ், செம்பாலை ஆகியோர் எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் ஆவார்கள். எனது அம்மாவிற்கு கீதா என்ற ஒரே ஒரு தங்கை இருந்தார் தற்போது அவர் உயிருடன் இல்லை. வழக்கு சொத்தானது எனது அப்பாவின் தாத்தா சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தை இதுநாள் வரை பாகப்பிரிவினை செய்யவில்லை. இந்த வழக்கு சொத்து பாகப்பிரிவினை செய்யப்படாத சொத்து என்பதால் 6ம் பிரதிவாதி திவ்ய காதம்பரி இந்த வழக்கு சொத்தை காஞ்சன் என்பவரின் வாரிசுகள் அனைவரிடமும் கையொப்பம் பெற்று தான் சொத்தை வாங்கினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8ல் காஞ்சன் அவர்களின் வாரிசுகள் கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். எனக்கு அது குறித்து தாமதமாகத்தான் தெரியவந்தது. ஏன் எனக்கான பாகத்தை கொடுக்காமல் கையொப்பம் போட்டீர்கள் என எனது அப்பாவிடம் நான் கேட்டேனா என்றால் கேட்டேன். எனது திருமணத்திற்கு பிறகு தான் அவ்வாறு கேட்டேன். எனது திருமணத்திற்கான சீர்வரிசைகளை எனது அப்பா மற்றும் அம்மா இருவரும் சேர்ந்து செய்தார்கள். எனது சித்தி கீதாவையும் எனது அப்பா தான் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டு இருந்தார். எனது அப்பாவிற்கு கீதா தான் முதல் மனைவி என்றும், எனது அம்மா இரண்டாவது மனைவி என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு ஆரணியை சேர்ந்த ஒரு நபருடன் திருமணமாகியிருந்தது என்றும், அவருக்கு தான் நான் பிறந்தேன் என்றால் சரியல்ல. கீதாவிற்கும் எனது அப்பாவிற்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். எனது அம்மாவை எனது அப்பா ஸ்ரீதர் திருமணம் செய்து கொள்ளாமலேயே உடன் வைத்து கொண்டு வாழ்க்கை நடத்தி என்னையும் எனது அம்மாவையும் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. என்னுடைய பிறப்பு சான்றையோ, எனது கல்லூரி மாற்றுச் சான்றிதழையோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும், ஸ்ரீதர் எனக்கு அப்பாவே கிடையாது என்றும், இந்த வழக்கு சொத்தில் நான் எவ்வித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. விற்ற சொத்து போக மீதம் நிறைய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். எனக்கு சொத்து வேண்டும்

என்றால் எனது அப்பாவிடம் கேட்டு மற்ற சொத்துக்களில் பங்கு பெற முடியும் என்றும், 6ம் பிரதிவாதி வாங்கிய சொத்தில் அவர் மருத்துவமனை கட்டி இருப்பதாலும், அதன் மதிப்பு தற்போது உயர்ந்து இருப்பதாலும், அவருக்கு தொந்தரவு கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.